

கோவை கோனியம்மன் திருக்கோவிலில் கோவை மாவட்ட அறங்காவலர் குழு தலைவராக மெட்டல் ராஜாமணி உறுப்பினர்களாக சு.தனபால், கர்ண பூபதி, கவிதா கல்யாணசுந்தரம், பார்த்திபன் மயில்சாமி ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி சால்வை அணிவித்து வாழ்த்துக்கூறினர். இதில் காரமடை கிழக்கு ஒன்றியச் செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், கோனியம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் வி.லட்சுமணன், உறுப்பினர்கள் வி.ஆர்.வெங்கடேஷ், வைரமணி உள்பட பலர் உள்ளனர்.

### ஒன்றியச் செயலாளர் சித்தேரி சிவா ஏற்பாட்டில்

# மன்னை மத்திய ஒன்றியக் கழக நிர்வாகிகளுக்கு கலைஞர் சிலை வழங்கும் விழா!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், மே. 28 -

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மன்னார்குடி மத்திய ஒன்றிய செயலாளர் சித்தேரி சிவா ஏற்பாட்டில் கழக நிர்வாகிகளுக்கு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திரு உருவச் சிலை வழங்கும் விழா, மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், இன்று (28.05.2025 - புதன்) நெடுவாக்கொட்டை வீரப்பன் கோயில் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்த விழாவில் தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்று சிறப்பிக்கிறார்.

தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், ச.முரசொலி எம்.பி., மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் இரா.தென்னவன், மாநில இளைஞரணி துணைத்தலைவர் தாட்கோ தலைவர் ந.இளையராஜா, அவைத் தலைவர் க.தன்ராஜ், மேற்கு ஒன்றிய செயலாளர் டி.எஸ்.டி.முத்துவேல், பொதுக்குழு உறுப்பினர் காஞ்சித்துரை, தொகுதி பொறுப்பாளர் ராஜா சீனிவாசன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்கின்றனர்.

மன்னை மத்திய ஒன்றிய செயலாளர் சித்தேரி சிவா வரவேற்புரையும், நெடுவாக்கோட்டை கிளை செயலாளர் கோ.கருணாகரன் நன்றியுரையும் ஆற்றுகின்றனர்.

நிகழ்வுகளில் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக நிலை முகவர்கள் உள்ளிட்டோருக்கு கலைஞர் அவர்களின் சிலை வழங்கும் நிகழ்வும், தலைமைக்கழகத்தால் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஒன்றிய சார்பு அணிகளின் பொறுப்பாளர்கள் அறிமுகமும் நடைபெற இருக்கிறது. இதில் வழங்கப்படும் கலைஞர் அவர்களின் சிலை ஏற்கனவே அரசின் விதிகளுக்குட்பட்டு அமைக்கப்பட்டிருக்கும் கழக கொடி மேடைகள் அருகே ஜூன்.3 அன்று நிறுவப்பட இருக்கிறது.

மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொது மக்கள் என பெருந்திரளானோர் பங்கேற்கின்றனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

**ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!**

**தஞ்சாவூர், மத்திய மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:**

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 28.05.2025 புதன்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் மத்திய | அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி, கவுண்டம்பாளையம் பகுதியில் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்த மாணவி கோமதிக்கு கல்லூரி படிப்பிற்காக கல்வி ஊக்கத் தொகையினை கோவை வடக்கு மாவட்டக் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். உடன் மாவட்ட அவை தலைவர் புருஷோத்தமன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், இளைஞர் அணி ஹக்கீம், தொண்டரணி குணசீலன் உள்பட பலர் உள்ளனர்.

## ஈரோடு வடக்கு மாவட்டம்

# பவானிசாகர் தெற்கு, பவானிசாகர் வடக்கு - நம்பியூர் கிழக்கு, நம்பியூர் மேற்கு - தூக்கநாயக்கன்பாளையம் வடக்கு, தூக்கநாயக்கன்பாளையம் தெற்கு - கோபிசெட்டிபாளையம் தெற்கு, கோபிசெட்டிபாளையம் மத்திய - அந்தியூர் வடக்கு, அந்தியூர் மத்திய, அந்தியூர் தெற்கு - அம்மாபேட்டை கிழக்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு !

2026ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் - அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் - தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் **தலைவர்** அவர்கள் அமைத்த **"தி.மு.க. ஒருங்கிணைப்புக்குழு"** ஆலோசித்து எடுத்த முடிவின்படி,

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர்வடக்குமற்றும்தெற்குஒன்றியங்கள்இணைத்துமறுசீரமைக்கப்படுகிறது;நம்பியூர், தூக்கநாயக்கன்பாளையம், கோபிசெட்டிபாளையம் தெற்கு ஒன்றியம் இரண்டாகவும், அந்தியூர் ஒன்றியம் மூன்றாகவும், அம்மாப்பேட்டை கிழக்கு ஒன்றியமாக பிரிக்கப்பட்டு புதிய ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட **பவானிசாகர் தெற்கு, பவானிசாகர் வடக்கு – நம்பியூர் கிழக்கு, நம்பியூர் மேற்கு – தூக்கநாயக்கன்பாளையம் வடக்கு, தூக்கநாயக்கன்பாளையம் தெற்கு – கோபிசெட்டிபாளையம் தெற்கு, கோபிசெட்டிபாளையம் மத்திய – அந்தியூர் வடக்கு, அந்தியூர் மத்திய, அந்தியூர் தெற்கு – அம்மாபேட்டை கிழக்கு** ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**பவானிசாகர் தெற்கு ஒன்றியம் :** 1. பெரியகள்ளிப்பட்டி, 2.விண்ணப்பள்ளி, 3. மாதம்பாளையம், 4. நல்லூர், 5. பனையம்பள்ளி, 6. தேசிபாளையம், 7. நொச்சிகுட்டை ஆகிய 7 ஊராட்சிகள்.

**பவானிசாகர் வடக்கு ஒன்றியம் :** 1.உத்தண்டியூர், 2. கொத்தமங்கலம், 3. தொப்பம்பாளையம், 4. முடுக்கன்துறை, 5. புங்கார் ஆகிய 5 ஊராட்சிகள் மற்றும் பவானிசாகர் பேரூர்.

**நம்பியூர் கிழக்கு ஒன்றியம் :** 1. கெட்டிசெவியூர், 2. எம்மாம்பூண்டி, 3.கோசணம், 4. கரட்டுப்பாளையம், 5. குருமந்தூர், 6. ஓழலகோயில், 7.தாழ்குனி ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் நம்பியூர் பேரூர்.

**நம்பியூர் மேற்கு ஒன்றியம் :** 1. ஆண்டிபாளையம், 2.அஞ்சானூர், 3. கூடக்கரை, 4. கடத்தூர், 5. லாகம்பாளையம், 6.பொலவபாளையம், 7. சுண்டக்காம்பாளையம், 8.வேமாண்டம்பாளையம், 9. காராப்பாடி, 10. காவிலிபாளையம், 11.வரப்பாளையம் ஆகிய 11 ஊராட்சிகள் மற்றும் எலத்தூர் பேரூர்

**தூக்கநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம் :** 1. கணக்கம்பாளையம், 2. கொண்டையம்பாளையம், 3. நஞ்சைபுளியம்பட்டி, 4.புஞ்சைதுறையம்பாளையம், 5. பெருமுகை ஆகிய 5 ஊராட்சிகள் மற்றும் வாணிப்புத்தூர் பேரூர்.

**தூக்கநாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றியம் :** 1. அக்கரைகொடிவேரி, 2.அரக்கன்கோட்டை, 3. கொங்கர்பாளையம், 4.ஒடையா கவுண்டன்பாளையம், 5. புல்லப்பநாயக்கன்பாளையம் ஆகிய 5 ஊராட்சிகள் மற்றும் பெரியகொடிவேரி, காசிபாளையம் ஆகிய 2 பேரூர்கள்.

**கோபிசெட்டிபாளையம் தெற்கு ஒன்றியம் :** 1. அளுக்குளி, 2. அயலூர், 3. கலிங்கியம், 4. கோட்டுப்புள்ளாம்பாளையம், 5. சிறுவலூர் ஆகிய 5ஊராட்சிகள் மற்றும் கொளப்பலூர், லக்கம்பட்டி ஆகிய 2 பேரூர்கள்.

**கோபிசெட்டிபாளையம் மத்திய ஒன்றியம் :** 1. பாரியூர், 2.குள்ளம்பாளையம், 3. மொடச்சூர், 4. நாகதேவம்பாளையம், 5.நஞ்சைகோபி, 6. நாதிபாளையம், 7. வெள்ளாளபாளையம், 8.வெள்ளாங்கோயில் ஆகிய 8 ஊராட்சிகள்

**அந்தியூர் வடக்கு ஒன்றியம் :** 1.பர்கூர் ஊராட்சி

**அந்தியூர் மத்திய ஒன்றியம் :** 1. சின்னதம்பிபாளையம், 2.மைக்கேல்பாளையம், 3. எண்ணமங்கலம், 4. கெட்டிச்சமுத்திரம், 5.நகலூர், 6. பச்சாம்பாளையம், 7. சங்கராபாளையம் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் அந்தியூர் பேரூர்.

**அந்தியூர் தெற்கு ஒன்றியம் :** 1. பிரம்மதேசம், 2. கீழ்வானி, 3.குப்பாண்டாம்பாளையம், 4. கூத்தம்பூண்டி, 5. மூங்கில்பட்டி, 6.வேம்பத்தி ஆகிய 6 ஊராட்சிகள் மற்றும் அத்தாணி பேரூர்.

**அம்மாபேட்டை கிழக்கு ஒன்றியம் :** 1. சென்னம்பட்டி, 2. கொமராயனூர், 3. மாத்தூர், 4. புதூர், 5. வெள்ளித்திருப்பூர் ஆகிய 5 ஊராட்சிகள்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **பவானிசாகர் தெற்கு, பவானிசாகர் வடக்கு – நம்பியூர் கிழக்கு, நம்பியூர் மேற்கு – தூக்கநாயக்கன்பாளையம் வடக்கு, தூக்கநாயக்கன்பாளையம் தெற்கு – கோபிசெட்டிபாளையம் தெற்கு, கோபிசெட்டிபாளையம் மத்திய – அந்தியூர் வடக்கு, அந்தியூர் மத்திய, அந்தியூர் தெற்கு – அம்மாபேட்டை கிழக்கு** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**பவானிசாகர் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ந.காளியப்பன்,** ஈரோடு மாவட்டம்.
**பவானிசாகர் வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.எஸ்.மகேந்திரன்,** ஈரோடு மாவட்டம்.
**நம்பியூர் கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **பி. செந்தில்குமார்,** ஈரோடு மாவட்டம்.
**நம்பியூர் மேற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எம்.எஸ். சென்னிமலை,** ஈரோடு மாவட்டம்.
**தூக்கநாயக்கன்பாளையம் வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எம்.சிவபாலன்**, ஈரோடு மாவட்டம்.
**தூக்கநாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ஜம்பு (எ) கே.கே.சண்முகம்,** ஈரோடு மாவட்டம்.
**கோபிசெட்டிபாளையம் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **எஸ்.ஏ.முருகன்,** ஈரோடு மாவட்டம்.
**கோபிசெட்டிபாளையம் மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கா. சீனிவாசன்** , ஈரோடு மாவட்டம்.
**அந்தியூர் வடக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **பி.ஜி. ராமதாஸ்**, ஈரோடு மாவட்டம்.
**அந்தியூர் மத்திய ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ஏ.ஜி. வெங்கடாசலம்,** ஈரோடு மாவட்டம்.
**அந்தியூர் தெற்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **ஆர். நாகேஸ்வரன்,** ஈரோடு மாவட்டம்.
**அம்மாபேட்டை கிழக்கு ஒன்றியம்:** பொறுப்பாளர் : **கே.எஸ். சரவணன்,** ஈரோடு மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 26.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் வடக்கு ஒன்றியம் சிறுவாச்சூர் , மணி விழுந்தான் ஆகிய ஊராட்சிகளில் இருந்து அ.தி.மு.க, பா.ம.க, ஆகிய கட்சிகளில் இருந்து 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது வடக்கு ஒன்றியச் செயலாளர் பாலமுருகன் உடனிருந்தார்.




தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாச்சூரினைச் சேர்ந்த ராமசாமி அருள்மொழி என்பவர் துபாய் நாட்டில் பணியின் போது இறந்ததால் அவருக்கு சேர வேண்டிய காப்பீட்டுத் தொகையை தமிழ்நாடு அரசின் மூலம் பெற்று அவரது குடும்பத்திற்கு ரூ.7.12.589க்கான காசோலையை தஞ்சை மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் முன்னிலையில் வழங்கினார்.